# ஒரு முள்ளங்கி தோட்டம்

## தமிழில் கிருஷ்ணன்

முன்னொரு காலத்தில் ஒரு குடும்பம் இருந்தது. அந்த குடும்பத்தில் அம்மா, அப்பா, ஒரு பெரிய மகள் அவளுக்கு சிறியவன் ஒரு தம்பி, கடைக்குட்டி ஒரு மகள் ஆகியோர் இருந்தனர். அவர்கள் வாழ ஒரு வீடும் இருந்தது அதில் ஒரு சிறிய தோட்டத்திற்கான இடமும் இருந்தது.

“சிறிய இடமாக இருந்தாலும் பரவாயில்லை ஏனென்றால் நம்மிடம் ஒரு சிவப்பு முள்ளங்கியின் விதை மட்டுமே இருக்கிறது” என்றாள் அம்மா

“தோட்டமே இல்லாமல் இருப்பதற்கு ஒரு முள்ளங்கி தோட்டமாவது இருக்கிறேதே என்று நாம் சந்தோஷப்பட வேண்டும். விதையை நடுவதற்கு நான் குழி தோண்டி தருகிறேன்” என்றார் அப்பா.

“தோட்டத்தில் நான் தான் விதைப்பேன்” என்றாள் அம்மா
“நான் தான் தோட்டத்தில் தண்ணீர் ஊற்றுவேன்” என்றாள் பெரியவள்.
“நான் தான் தோட்டத்தில் களை எடுப்பேன்” என்றான் தம்பி
“நான் என்ன செய்வேன்?” என்றாள் கடைக்குட்டி தங்கை.



“நீ இன்னும் பெரியவளாக வேண்டும் இந்த வேலைகளை செய்வதற்கு” என்று எல்லோரும் கூறினார்கள். “நானும் எதையாவது செய்வேன்” என்று கூறினாள் சிறியவள். ஆனால் என்ன வேலை செய்வாள் என்று சொல்லவில்லை.

அப்பா குழி தோண்டினார். அம்மா முள்ளங்கி விதை விதைத்தாள். தினமும் அக்கா அதற்கு தண்ணீர் ஊற்றினாள். ஒவ்வொரு நாளும் தம்பி களைகளை பிடுங்கினான்.



தினமும் தங்கை செடியிடம் “குட்டி முள்ளங்கியே நல்லா வளர்ந்திடு.  நல்ல சுவையான காயை தந்திடு” என்று வேண்டினாள். குட்டி முள்ளங்கியும் நன்றாக வளர்ந்தது.

செடியிடம் “குட்டி முள்ளங்கியே பெரிதாக  வளர்ந்திடு” என்று சிறிய மகள் வேண்டினாள்.
குட்டி முள்ளங்கியும் பெரிதாக வளர்ந்தது.

செடியிடம் “குட்டி முள்ளங்கியே மிக பெரிதாக வளர்ந்திடு” என்று சிறிய மகள் வேண்டினாள்.
குட்டி முள்ளங்கியும் மிக பெரிதாக வளர்ந்தது.





ஒரு நாள் அப்பா வேலையிலிருந்து திரும்பி வந்த போது முள்ளங்கி செடி வீட்டை விட உயரமாக வளர்ந்து விட்டதை கவனித்தார்.
வீட்டில் எல்லோரையும் அழைத்தார். “முள்ளங்கியை அறுவடை செய்து விடலாம்” என்று சொன்னார். செடியை வலுவாக பிடித்து இழுத்தார். அது அசைவதாக இல்லை.
பின் அம்மாவும் உதவிக்கு வந்தாள். அப்பா முள்ளங்கி செடியை பிடித்து இழுக்க அம்மா அப்பாவை நன்கு பற்றி கொண்டாள். இருவரும் சேர்ந்து எவ்வளவு இழுத்தும் அது அசை கொடுக்கவில்லை.
“நானும் உதவிக்கு வரேன்” என்று சொல்லி கொண்டே பெரிய மகளும் வந்தாள். அவள் அம்மாவை இருக்க பிடித்து கொண்டாள். அப்பா முள்ளங்கி செடியை பிடித்து இழுக்க அம்மா அப்பாவை நன்கு பற்றி கொண்டாள். மூவரும் சேர்ந்து எவ்வளவு இழுத்தும் அது அசை கொடுக்கவில்லை.





“நானும் வரேன் உதவிக்கு”  என்று மகனும் சேர்ந்து கொண்டான். அவன் அக்காவை கெட்டியமாக பற்றி கொண்டான். அக்கா அம்மாவை பற்றி கொண்டாள். அப்பா முள்ளங்கி செடியை பிடித்து இழுக்க அம்மா அப்பாவை நன்கு பற்றி கொண்டாள். நான்கு பேர் சேர்ந்து எவ்வளவு இழுத்தும் அது அசை கொடுக்கவில்லை.

“நான் உதவி செய்யட்டுமா” என்று கேட்டாள் கடைக்குட்டி தங்கை.

“நீ இன்னும் பெரியவளாக வேண்டும் இந்த வேலைகளை செய்வதற்கு” என்று எல்லோரும் கூறினார்கள்.

“இல்லை என்னால் உதவி செய்ய முடியும்” என்று சொல்லி கொண்டே முள்ளங்கி செடியின் அருகில் சென்று “குட்டி முள்ளங்கியே நீ பெரிதாக வளர்ந்து விட்டாய், மிக பெரிதாக வளர்ந்து விட்டாய். உன் காயை  கொடுக்கும் நேரம் வந்து விட்டது. மேல் எழுந்து வருவாயாக” என்று வேண்டினாள்.





இதை சொல்லி விட்டு கடைக்குட்டியும் அவர்களோடு போய் சேர்ந்து கொண்டாள். அவளுடைய அண்ணனை இறுக பற்றி கொண்டாள். அவன் அக்காவை கெட்டியமாக பற்றி கொண்டான். அக்கா அம்மாவை பற்றி கொண்டாள்.அப்பா முள்ளங்கி செடியை பிடித்து இழுக்க அம்மா அப்பாவை நன்கு பற்றி கொண்டாள்.

எல்லோரும் சேர்ந்து இழுக்க, அந்த மிக பெரிய முள்ளங்கி வெளியே வந்தது! அதை சமைத்து எல்லோரும் உண்டார்கள். அது போன்ற சுவையான முள்ளங்கியை சாப்பிட்டதே இல்லை என்றார்கள்.



முற்றும்